# மாகாணக் கல்வித் திணைக்களம் வடக்கு மாகாணம்

## க.பொ.த உயர்தர நிலையறி பரீட்சை – 2021

**தரம் :-13(2021)** **ஐரோப்பிய வரலாறு I – புதிய பாடத்திட்டம்**
**(கிரேக்க – உரோமர் காலம் முதல் கி.பி 1989 வரை)** **25B/T/II**
**நேரம் :- 3 மணித்தியாலம்**

- மேலதிக வாசிப்பு நேரம் :- 10 நிமிடங்கள்
- வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**பெயர் / சுட்டெண் :- ...............................**

**அறிவுறுத்தல்கள்**
- ❖ இப்பகுதி 40 வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் இந்த வினாத்தாளிலேயே விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள ஐந்து தெரிவுகளில் ஒன்று மட்டுமே சரியானது. அந்தச்சரியான விடையைத் தெரிவுசெய்து தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கேற்ப விடையைக் குறிக்குக.
- ❖ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதிய பின்னர் பகுதி I இன் விடைத்தாள்களை பகுதி IIஇன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

❖ **1 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் எனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. (1) இபுரோ (2) விஸ்ரியூலா (3) ஸ்கோஜெராக் (4) குவாடியானா (5) டாகுஸ் (...)

02. (1) அப்பலோடோரஸ் (2) ஈஸ்கிலஸ் (3) அரிஸ்டோபோனிஸ்
(4) சோபோகிளிஸ் (5) தெஸ்பிஸ் (...)

03. (1) ஒகஸ்டஸ் சீஸர் (2) டயோகிளீசியன் (3) கொன்ஸ்தாந்தைன்
(4) பெரிக்கிளிஸ் (5) தியோடோசியஸ் (...)

04. (1) லிவர்பூல் (2) மார்சேல்ஸ் (3) மன்செஸ்ரர் (4) பேர்மிங்ஹாம் (5) லண்டன் (...)

05. (1) ஜோன்ஹே (2) சாமுவெல் குறொம்டன் (3) வில்லியம் சீமன்ஸ்
(4) றிச்சட் ஆக்ரைட் (5) ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ் (...)

06. (1) நிக்கலஸ் கொப்பனிக்கஸ் (2) பெரசல்ஸஸ் (3) வில்லியம் ஹார்வே
(4) முந்தினாஸ் (5) மைக்கல் சர்வடைஸ் (...)

07. (1) மத்தாயஸ் (2) மாக்ஸிமிலியன் (3) வலன்ஸ்ரைன்
(4) நான்காம் கிறிஸ்டியன் (5) ஐந்தாம் சாள்ஸ் (...)

08. (1) டில்சிற் உடன்படிக்கை (2) ஏமியன்ஸ் உடன்படிக்கை (3) லுனெவில் உடன்படிக்கை

(4) பிரஸ்பேர்க் உடன்படிக்கை (5) புளொம்பியர்ஸ் உடன்படிக்கை (…)

09. (1) வூட்ரோவில்சன் (2) பிராங்ளின் ரூஸ்வெல்ட் (3) லொயிட்ஜோர்ஜ்

(4) கிளெமென்சோ (5) விக்டோறியோ ஒலென்டோ (…)

10. (1) உலக சுகாதாரத் தாபனம் (2) சர்வதேச சிறுவர் நிதியம் (3) சர்வதேச நாணய நிதியம்

(4) சர்வதேச நீதிமன்றம் (5) ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகம் (…)

❖ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியில் உள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தாது உள்ளன. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

11. 1) டோவர் நீரிணை - ஆங்கிலக் கால்வாயும் வடகடலும்
2) பொஸ்பரஸ் நீரிணை - ஈஜியன் கடலும் மர்மரா கடலும்
3) மெஸினா நீரிணை - டிரேனியன் கடலும் அயோனியன் கடலும்
4) போனிபேரி நீரிணை - பலேரிக் கடலும் டிரேனியன் கடலும்
5) டார்டெனல்ஸ் நீரிணை – கருங்கடலும் அஸோவ் கடலும் (…)

12. 1) புரோடகோரஸ் - "மனிதனே எல்லாவற்றுக்கும் அளவுகோல்"
2) பிதக்கோரஸ் - "சூரியனும் சந்திரனும் புவியை ஒத்தவை"
3) டெமோகிரடீஸ் - "எல்லாப் பொருட்களும் அணுக்களால் ஆனவை"
4) தேலிஸ் - "இயற்கையை முன்னறிந்திட முடியும்"
5) சோக்கிரடீஸ் - "சீரிய பண்பே அறிவு" (…)

13. 1) ஜூபிட்டர் - விண்ணுக்கு அதிபதி
2) செரஸ் - சிறந்த விளைச்சலுக்கு அதிபதி
3) மார்ஸ் - யுத்தத்திற்கு அதிபதி
4) நெப்டியூன் - ஞானத்தின் அதிபதி
5) வீனஸ் - காதலுக்கு அதிபதி (…)

14. 1) போர்த்துக்கேயர் - கோவா
2) ஒல்லாந்தர் - பத்தேவியா
3) பிரான்ஸியர் - சிங்கப்பூர்
4) பிரித்தானியர் - சென்னை
5) ஸ்பானியர் - மணிலா (…)

15. 1) திரிக்விலி - நோர்வே
2) யூதான்ற் - பர்மா
3) டேக்கமர்ஷல் - சுவீடன்
4) குர்ட் வோல்ட் ஹைம் - எகிப்து
5) ஜாவியர் பெரஸ்டி குவேலர் - பேரு (…)

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் X,Y நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுக்கள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டுள்ளன. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக் குறியினுள் எழுதுக.**

16

| X | Y |
|---|---|
| 1) கொத்லாந்து | A மத்தியதரைக்கடல் |
| 2) செட்லாந்து | B அத்திலாந்திக் சமுத்திரம் |
| 3) மோல்டா | C போல்டிக்கடல் |
| 4) மடகஸ்கார் | D இந்து சமுத்திரம் |
| 5) அயர்லாந்து | E வடகடல் |

(1) CEADB (2) BAEDC (3) BEADC (4) CDAEB (5) CBADE (…)

17

| X | Y |
|---|---|
| 1) ஆஸ்திரியா | A புகாரெஸ்ற் |
| 2) டென்மார்க் | B கோபன்ஹேகன் |
| 3) லிதுவேனியா | C புடாபெஸ்ற் |
| 4) ரூமேனியா | D வியன்னா |
| 5) ஹங்கேரி | E வில்நியாஸ் |

(1) DEBAC (2) BDEAC (3) DACBE (4) DBEAC (5) BCDEA (…)

18

| X | Y |
|---|---|
| 1) பௌதீகவியல் | A ஆர்க்கிமிடிஸ் |
| 2) அளவையியல் | B புரோடகோரஸ் |
| 3) மருத்துவவியல் | C ஹிபோகிரடீஸ் |
| 4) தனிமனித வாதம் | D அரிஸ்ரோட்டில் |
| 5) நாடகவியல் | E தெஸ்பிஸ் |

(1) ADCBE (2) AECDB (3) BDCAE (4) BACED (5) ABCED (…)

19 X Y

| X | Y |
|---|---|
| 1) டைத் | A நாட்டின் அனைத்துப் பிரஜைகளிடமிருந்தும் அறவிடப்பட்ட வரி |
| 2) கோர்வி | B மக்களால் திருச்சபைக்கு செலுத்தப்பட்ட வரி |
| 3) கெபெல் | C உப்பைப் பெறுவதற்காக மக்கள் செலுத்த வேண்டிய வரி |
| 4) கெபிடேசன் | D சாலைகளை செப்பனிடுவதற்கு மக்களிடம் அறவிடப்பட்ட வரி |
| 5) டெய்லி | E மக்களின் சொத்துக்களுக்காக அறவிடப்பட்ட வரி |

(1) DECBA (2) BDCAE (3) DACEB (4) BCEAD (5) ADCBE (…)

20 X Y

| X | Y |
|---|---|
| 1) செஞ்சட்டைப் படை | A அடோல்வ் ஹிட்லர் |
| 2) புதிய செம்படை | B வீ.ஐ.லெனின் |
| 3) கருஞ்சட்டைப் படை | C மா.வோ.சேதுங் |
| 4) கபிலச்சட்டைப் படை | D கரிபோல்டி |
| 5) செம்பாதுகாப்புப் படை | E பெனிடோ முஸோலினி |

(1) DCEAB (2) DCAEB (3) BCEAD (4) BDAEC (5) DBEAC (…)

❖ **21-25 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்புக்கு பொருந்தாதுள்ளது அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

21. கிரேக்க நாகரிககால சமய நம்பிக்கைகள்.

(1) கிரேக்கர்கள் பல கடவுள் வணக்க முறைகளைக் கையாண்டனர்.

(2) ஒவ்வொரு நகரத்திற்கும் அதிபதியாக ஒவ்வொரு தெய்வம் வழிபடப்பட்டது.

(3) பிற்பட்ட காலங்களில் கிறிஸ்தவ சமயம் கிரேக்கத்தில் செல்வாக்குப் பெற்று விளங்கியது.

(4) அனைத்துத் தெய்வங்களும் ஒலிம்பஸ் மலை உச்சியில் வசிப்பதாக நம்பினர்.

(5) இவர்களின் வழிபாட்டு முறைகளில் குறிசொல்லுதல், பலியிடல் என்பனவும் இடம்பெற்றன. (…)

22. கலிலியோ கலிலி.

(1) இத்தாலியின் புளோரன்ஸ் நகரில் கி.பி 1564இல் பிறந்தார்.

(2) வானியல் விஞ்ஞானத்தில் பல புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தினார்.

(3) பீஸா பல்கலைக்கழத்தில் கணிதவியற் பேராசிரியராகப் பணியாற்றினார்.

(4) பூமி கோள வடிவானது என்பதை முதன் முதலில் கண்டறிந்தார்.

(5) கி.பி1609இல் தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார். (…)

23. மகிமைப் புரட்சியின் விளைவுகள்.

(1) இங்கிலாந்து மன்னர்களுக்கும் பாராளுமன்றத்திற்குமிடையிலான மோதல்கள் முடிவுக்கு வந்தன.

(2) இரண்டாம் ஜேம்ஸ் பதவி நீக்கப்பட்டு அவரது உறவினரான முதலாம் ரிச்சட் மன்னனாக்கப்பட்டார்.

(3) எல்லா மதப்பிரிவினர்களுக்கும் சமய சுதந்திரம் கிடைத்தது.

(4) நீதித்துறை அதிகாரம், சுயாதீனம் என்பன நிலைநாட்டப்பட்டன. .

(5) இங்கிலாந்தில் மக்களின் கருத்துச் சுதந்திரமும், உரிமைகளும் மதிக்கப்பட்டன. (…)

24. நெப்போலியன் பொனாபட் மேற்கொண்ட உடன்படிக்கைகள்.

(1) 1797இல் ஆஸ்திரியாவுடன் காம்போபோமிய உடன்படிக்கை.

(2) 1801இல் ஆஸ்திரியாவுடன் பாரிஸ் உடன்படிக்கை.

(3) 1802இல் இங்கிலாந்துடன் ஏமியன்ஸ் உடன்படிக்கை.

(4) 1807இல் ரஷ்யாவுடன் ரில்சிற் உடன்படிக்கை.

(5) 1808இல் போர்த்துக்கல்லுடன் சிந்திரா உடன்படிக்கை (…)

25. பனிப்போர்.

(1) இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பின் ஐக்கிய அமெரிக்காவுக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் இடையில் நடைபெற்ற மறைமுக யுத்தம்.

(2) இரு நாடுகளும் நேரடியாக யுத்தத்தில் .ஈடுபடாதபோதும் தத்தமது நட்பு நாடுகள், உளவு அமைப்புக்கள், பொருளாதாரக்கொள்கை என்பவற்றினுடாக போரை முன்னெடுத்தன.

(3) இது மீண்டுமோர் உலகப்போர் ஏற்படுமோ? என்ற அச்சத்தை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியிருந்தது.

(4) 1991இல் ரஷ்யா பிளவுபட்டதைத் தொடர்ந்து முடிவுக்கு வந்தது..

(5) பனிப்போர்க் காலத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவுக்கு சார்பாகச் செயற்பட்டன.. (…)

❖ **26 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (A),(B),(C),(D) என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை/ விடைகளைத் தெரிவுசெய்க.**

**(A)யும் (B)யும் மட்டும் சரியாயின் 1 எனவும்**

**(A)யும் (C)யும் மட்டும் சரியாயின் 2 எனவும்**

**(B)யும் (C)யும் மட்டும் சரியாயின் 3 எனவும்**

**(C)யும் (D)யும் மட்டும் சரியாயின் 4 எனவும்**

**வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| (A)யும் (B)யும் மட்டும் சரி | (A)யும் (C)யும் மட்டும் சரி | (B)யும் (C)யும் மட்டும் சரி | (C)யும் (D)யும் மட்டும் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் |

26. மேல்வருவோருள் கிரேக்க நாடக ஆசிரியர்கள் யாவர்?

(A) டிமோகிரடீஸ்
(B) ஸோலோன்
(C) ஸோபோகிளிஸ்
(D) ஐஸிலஸ். (…)

27. மேல்வருவனவற்றுள் மதச்சீர்திருத்தத்தின் விளைவு/விளைவுகள் எது/எவை?

(A) பாப்பரசரின் சமய மற்றும் அரசியல் அதிகாரங்கள் உறுதியான நிலையை அடைந்தமை.
(B) எதிர் சமய சீர்திருத்த இயக்கம் தோற்றம் பெற்றமை.
(C) சமயத் தலைமைத்துவம் அரச நிர்வாகத்திற்கு கீழ்ப்பட்டமை.
(D) ஐரோப்பா மத அடிப்படையில் இரண்டாகப் பிளவுபட்டமை. (…)

28. புடவைக் கைத்தொழிலின் விருத்தி தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியானது/சரியானவை.

(A) ஜேம்ஸ் ஹாகிரிவ்ஸ் ஸ்பின்னிங் ஜெனியைக் கண்டுபிடித்தார்.
(B) எலியஸ் ஹார்வே தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
(C) ஜோன்லொகி பெயார்ட் மின்சாரத்தைக் கண்டுபிடித்தார்.
(D) எலிவிட்னி குளோறின் வாயுவைக் கண்டுபிடித்தார். (…)

29. போர்த்துக்கேயர் மேற்கொண்ட நாடுகாண் பயணங்கள் தொடர்பாக மேல்வருவனவற்றுள் சரியானது/ சரியானவை.

(A) ஆசியாவுக்கான புதிய கடல்வழியைக் கண்டுபிடிப்பதே பிரதான நோக்கமாகும்.
(B) பெர்னான்டோ கோடேஸ் பிறேசிலைக் கண்டுபிடித்தார்.
(C) ஆரம்பகாலக் கடற்பயண முயற்சிகள் கடலோ ஹென்றியின் ஆதரவுடன் நடைபெற்றது.
(D) பிரெஸ்டர் ஜோனின் ஆதரவுடன் போர்த்துக்கேயர் ஆசியாவில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர். (…)

30. ரஷ்யப் புரட்சியின் விளைவுகள் தொடர்பாக மேல்வருவனவற்றுள் சரியானது / சரியானவை.

(A) சார் வம்ச மன்னர்களின் கொடுங்கோலாட்சி முடிவுக்கு வந்தது.
(B) போல்சவிக் கட்சி ஆட்சியதிகாரத்தைப் பெற்றுக்கொண்டது.
(C) போல்சவிக் கட்சி சார்பாக கெரென்ஸ்கி முதலாவது ஜனாதிபதியானார்.
(D) 'சோவியத் சடவுடமைக் குடியரசு' என்ற பெயரில் புதிய அரசு தோன்றியது. (…)

❖ **31 தொடக்கம் 35 வரையிலான வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.**

31. உலகில் தோன்றிய புராதன இலக்கியங்களில் உயர்வான இடத்தினைப் பெறுகின்ற ''ஈனிட்'' என்ற நூலை எழுதியவர்.

(1) ரஸிட்டாஸ் (2) புளூடாக் (3) வெர்ஜில் (4) ஹொரேஸ் (5) ஓவிட் (…)

32. நான்றிஸ் நல்லாணை மூலம் ஹியுக்னோட்களுக்கு சமய சுதந்திரம் வழங்கிய பிரான்சிய மன்னன்.

(1) நான்காம் பிலிப் (2) ஒன்பதாம் லூயி (3) பிலிப் ஒகஸ்டஸ்

(4) பதினான்காம் லூயி (5) நான்காம் ஹென்றி (…)

33. பிரித்தானியாவில் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட ஆண்டு.

(1) கி.பி 1928 (2) கி.பி 1858 (3) கி.பி 1918

(4) கி.பி 1832 (5) கி.பி 1931 (…)

34. ''மனிதாபிமான இயக்கத்தின் தந்தை'' எனப் போற்றப்படுபவர்.

(1) வில்லியம் ஷேக்ஸ்பியர் (2) தோமஸ்மூர் (3) பிரான்சிஸ் பெற்றாக்

(4) நிக்கோலாய் மாக்கியவலி (5) ஜியோவானி பொக்காஸியோ (…)

35. ஐக்கிய நாடுகள் அமையத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள நகரம்.

(1) நியூயோர்க் (2) லண்டன் (3) பாரிஸ் (4) ஜெனீவா (5) வாஷிங்டன் (…)

❖ **36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச்சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1,2,3,4,5 என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள் எழுதுக.**

| | **முதலாம் கூற்று** | **இரண்டாம் கூற்று** |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதும் முதலாம் கூற்றை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| 36 | ஐரோப்பாவில் தோன்றிய முதலாவது பரந்த பேரரசு கிழக்கு உரோமப் பேரரசாகும். | வடஆபிரிக்காவில் எழுச்சி பெற்றிருந்த கார்தேஜியர்களை கி.மு149 – 146 வரை இடம்பெற்ற பியூனிக் போர்களில் உரோமர் வென்றமையால் உரோம சாம்ராஜ்யம் வடஆபிரிக்கா வரை பரவியது. | (…) |
| 37 | முஹம்மது நபியவர்களுக்குப் பின்வந்த அரசியல் ஆன்மீகத் தலைவர்கள் கலிபாக்கள் எனப்பட்டனர். | கலிபாக்களின் ஆட்சியில் கி.பி 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளில் முஸ்லிம் பேரரசு மிகபலம் பொருந்தியதாகக் காணப்பட்டது. | (…) |
| 38 | புரட்டஸ்தாந்து இயக்கத்தின் கத்தோலிக்கசபைக்கு எதிரான கண்டனங்களுக்கு முகங்கொடுக்கும் பொருட்டு கத்தோலிக்க திருச்சபையால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடே மதச்சீர்திருத்த இயக்கம் எனப்படும். | மதச்சீர்திருத்த இயக்கத்தில் இயேசுசபை, திரெண்ட் சம்மேளனம், இன்டெக்ஸ், இன்குஷிஷன் என்பன முக்கியபங்கு வகித்தன. | (…) |
| 39 | அமெரிக்காவின் சென்லோரன்ஸ் நதி தொடக்கம் மிசிசிப்பி நதியின் முகத்துவாரம் வரையான பிரதேசம் பிரான்சியருக்கு உரியதாக விளங்கியது. | ஏழாண்டுப்போரில் வெற்றிபெற்ற பிரான்ஸ் அமெரிக்க சுதந்திரப் போரின்போது பிரித்தானியருக்கு எதிராக குடியேற்றவாசிகளுக்கு உதவி புரிந்தது. | (…) |
| 40 | முதலாம் உலகப் போரின் முடிவில் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக சர்வதேச சங்கம் உருவாக்கப்பட்டது. | ஐக்கிய அமெரிக்காவிற்குச் சொந்தமான பேர்ள் துறைமுகம் மீதான யப்பானின் விமானத் தாக்குதலையடுத்து ஐக்கிய அமெரிக்கா நட்புநாடுகள் அணியில் இணைந்துகொண்டது. | (…) |

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

## க.பொ.த உயர்தர நிலையறி பரீட்சை – 2021

**தரம் :-13(2021)** ***ஐரோப்பிய வரலாறு II – புதிய பாடத்திட்டம்***

***(கிரேக்க – உரோமர் காலம் முதல் கி.பி 1989 வரை)*** **25B/T/II**

**அறிவுறுத்தல்கள்**

- **முதலாம்** வினா கட்டாயமானதாகும். முதலாம் வினாவுக்கும் B,C ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து மேலும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக.
- முதலாம் வினா உட்பட விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை **நான்கு** ஆகும்.
- முதலாம் வினாவிற்கு விடையளிக்க ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.

### பகுதி A

01 உமக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பாவின் புறவுருவப் படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா விடயங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (I) எதென்ஸ் | (V) டான்ஸிக் துறைமுகம் | (IX) ஆல்ப்ஸ் மலை |
| (II) சார்டீனியா | (VI) நெதர்லாந்து | (X) டோவர் நீரிணை |
| (III) அஸோவ் கடல் | (VII) வியன்னா | (XI) கீல் கால்வாய் |
| (IV) தைபர் நதி | (VIII) டினீபர் நதி | (XII) சென்். பீற்றர்ஸ் பேர்க் |

**(சரியாகக் குறித்துப் பெயரிடப்படும் ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதம் வழங்கப்படும்.)**

### பகுதி B

02 பின்வரும் துறைகளில் பண்டைய உரோமர்கள் ஈட்டிய சாதனைகளை சுருக்கமாக பரிசீலனை செய்க.

(I) ஆட்சி முறை

(II) சட்டங்கள் (16 புள்ளிகள்)

03 “**புவியியற் கண்டுபிடிப்புக்களால் ஐரோப்பாவின் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்பட்டன**”

(I) நாடுகாண் பயணங்களை மேற்கொண்ட முதலாவது ஐரோப்பிய நாடு எது? (01 புள்ளி)

(II) ஸ்பானியா சார்பாக நாடுகாண் பயணங்களை மேற்கொண்ட மாலுமிகள் **இருவரைத்** தருக. (02 புள்ளிகள்)

(III) நாடுகாண் பயணங்களுக்கு வழிவகுத்த காரணிகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(IV) நாடுகாண் பயணங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் பரசீலனை செய்க.(09 புள்ளிகள்)

04 (I) அமெரிக்க சுதந்திரப் போருக்கான காரணங்களை ஆராய்க. (06 புள்ளிகள்)

(II) அமெரிக்க சுதந்திரப் போரின் விளைவுகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

05 பின்வரும் தலைப்புக்களுள் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(I) ஐரோப்பிய நிலமானிய முறைமை

(II) தேசிய அரசுகளின் தோற்றமும், பண்புகளும்

(III) இங்கிலாந்தில் புடைவைக் கைத்தொழிலின் முன்னேற்றம்

(IV) கார்தினல் ரிச்செல்யு (8 X 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

06 (I) வியன்னா மாநாட்டின் நோக்கங்கள் பற்றி விளக்குக. (06 புள்ளிகள்)

(II) வியன்னா மாநாட்டின் விளைவுகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

07 (I) இத்தாலிய ஐக்கியத்திற்கு தலைமை தாங்கிய பிராந்திய அரசு எது? (01 புள்ளி)

(II) இத்தாலி ஐக்கியத்திற்கு பங்களித்த அமைப்புக்கள் **இரண்டினைத்** தருக. (02 புள்ளிகள்)

(III) இத்தாலி ஐக்கியத்திற்கு பிரதான தடையாக விளங்கிய நாடு எது? (01 புள்ளி)

(IV) 1848 வரை இத்தாலிய ஐக்கியத்திற்கு தடையாக விளங்கிய காரணிகள் பற்றி சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

(V) இத்தாலி ஒன்றிணைப்பின் பிரதான கட்டங்களை நுணுகி ஆராய்க. (08 புள்ளிகள்)

08 முதலாம் உலகப் போருக்கான காரணங்களைக் குறிப்பிட்டு, போரின் விளைவுகளை மதிப்பிடுக.

(16 புள்ளிகள்)

09 பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(I) மூன்றாம் நெப்போலியன்

(II) போல்சவிக் புரட்சி

(III) ஜேர்மனியில் நாஸிஸவாதத்தின் எழுச்சி

(IV) ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் (8 X 2 = 16 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

தரம் :- 13(2021) ஐரோப்பிய வரலாறு 25B/T/II

வினா இல :- 01 பெயர் / சுட்டெண் ............................

